மதுரை மாவட்டம் தேதி : 31/07/2026

MSS

முதல் இடைப் பருவத் தேர்வு – 2026

11 ஆம் வகுப்பு

கணக்குப்பதிவியல்

நேரம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

I குறிப்பு: (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். (10 × 1 = 10)

1. நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது
(அ) சமூகக் கணக்கியல் (ஆ) காரியதரிசிகளின் கணக்கியல்
(இ) மேலாண்மைக் கணக்கியல் (ஈ) பொறுப்பு கணக்கியல்

2. ஒரு வணிகத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ள அடிப்படையானது
(அ) குறிப்பேடு (ஆ) இருப்பாய்வு (இ) இருப்பு நிலைக் குறிப்பு (ஈ) பேரேடு

3. வணிகம் நீண்ட காலம் தொடர்ச்சியாக நடைபெறும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது
(அ) வணிக தனித்தன்மை கருத்து (ஆ) நிறுவன தொடர்ச்சி கருத்து
(இ) கணக்கியல் கால அனுமானம் (ஈ) முன்னெச்சரிக்கைக் கொள்கை

4. இந்தியாவில், கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு
(அ) இந்திய மைய வங்கி (ஆ) இந்திய செலவு மற்றும் கணக்காளர் நிறுவனம்
(இ) உச்ச நீதிமன்றம் (ஈ) இந்தியப் பட்டயக் கணக்காளர் நிறுவனம்

5. ஒரு நிறுவனத்தின் சொத்துகள் மதிப்பு ₹ 1,00,000 மற்றும் அதன் வெளியாட்களுடையனவான பொறுப்புகள் ₹ 60,000 எனில், அந்நிறுவனத்தில் முதல் _____
(அ) ₹ 1,60,000 (ஆ) ₹ 60,000 (இ) ₹ 1,00,000 (ஈ) ₹ 40,000

6. முன் கூட்டிச் செலுத்திய வாடகை ஒரு (அ) பெயரளவு கணக்கு (ஆ) ஆள்சார் கணக்கு
(இ) சொத்துக் கணக்கு (ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

7. ஒரு கணக்கின் பற்று மொத்தம் வரவு மொத்தத்தை விட அதிகமாக இருப்பின் அதன் பொருள்
(அ) வரவு இருப்பு (ஆ) பற்று இருப்பு (இ) இருப்பு இன்மை (ஈ) பற்று மற்றும் வரவு இருப்பு

8. உரிமையாளரால் தொழிலுக்கு கொண்டு வரப்படும் ரொக்கத்திற்கு வரவு செய்யப்படுவது
(அ) ரொக்க கணக்கு (ஆ) எடுப்புக் கணக்கு (இ) முதல் கணக்கு (ஈ) அனாமத்து கணக்கு

9. இருப்பாய்வில் பற்றுப்பத்தியின் மெரத்தமும் வரவுப்பத்தியின் மொத்தமும் வேறுபட்டால் அதை எடுத்து எழுத வேண்டிய கணக்கு
(அ) வியாபார கணக்கு (ஆ) வேறுபாட்டு கணக்கு (இ) அனாமத்து கணக்கு (ஈ) இதர கணக்கு

10. ஒரு இருப்பாய்வு தயாரிக்கப்படுவது (அ) ஆண்டு இறுதியில்
(ஆ) ஒரு குறிப்பிட்ட நாளில் (இ) ஒரு வருட காலம் முடிந்ததும் (ஈ) இவை ஏதும் இல்லை

II **குறிப்பு: எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
வினா எண் 17–க்கு கட்டாயமாக விடையளிக்கவும். (5 × 2 = 10)

11. கணக்கியலின் ஏதேனும் இரண்டு பணிகளைக் கூறுக.

12. ஆதார ஆவணங்கள் என்றால் என்ன?

13. இருப்பாய்வு தயாரிக்கும் முறைகள் யாவை?

14. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக:
(அ) {சொத்துகள் (₹ 1,00,000)} = {முதல் (₹ 80,000)} + {பொறுப்புகள் (?)}
(ஆ){சொத்துகள் (?)} = {முதல் (₹ 2,00,000)} + {பொறுப்புகள் (₹ 40,000)}

15. கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு.

16. ஆள்சார் கணக்குகள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?

17. பற்று இருப்பு என்றால் என்ன?

III **குறிப்பு: எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
வினா எண் 24–க்கு கட்டாயமாக விடையளிக்கவும். (5 × 3 = 15)

18. இரட்டைப் பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.

19. 'பணம் சார்ந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்கியலில் பதியப்படல் வேண்டும்' – விவரிக்கவும்.

20. கீழ்க்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப் பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டுக: (i) வெளித் தூக்குக்கூலி (ii) கூலி (iii) வாடகை பெற்றது (iv) முதல் (v) விற்பனை (vi) விற்பனைத் திருப்பம்

21. பின்வரும் நடவடிக்கைகளைக் குறிப்பேட்டில் பதிந்து பேரேட்டில் எடுத்து எழுதவும்:

நாள்	விவரம்	தொகை (₹)
2016 ஜூன் 1	ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது	10,000
2016 ஜூன் 5	வங்கியில் செலுத்தியது	5,000
2016 ஜூன் 7	ராம் என்பவரிடமிருந்து சரக்குகளை ரொக்கத்திற்கு வாங்கியது	1,000

22. இருப்பாய்வின் குறைபாடுகள் யாவை?

23. பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து அறைகலன் கணக்கைத் தயாரிக்கவும்:

நாள்	விவரம்	தொகை (₹)
2016 ஜூன் 1	கையில் உள்ள அறைகலன்	2,000
2016 ஜூன் 1	அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது	4,000
2016 ஜூன் 30	அறைகலன் விற்றது	400

24. பின்வரும் இருப்புகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்கவும்:

விவரம்	தொகை (₹)	விவரம்	தொகை (₹)
வங்கி கடன்	1,00,000	கொள்முதல்	90,000
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	50,000	விற்பனை	1,50,000
சரக்கிருப்பு	35,000	கடனாளிகள்	2,00,000
முதல்	1,25,000	வங்கி	1,00,000

IV குறிப்பு **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** (3 × 5 = 15)

25. (அ) ஜெயசீலி என்னும் தனிவணிகர் ஒரு பலசரக்குக் கடையினை நடத்தி வருகிறார். 2018 ஜனவரியில் அக்கடையின் நடவடிக்கைகள் பின்வருமாறு இருந்தன. அவைகளைக் குறிப்பேட்டில் பதிவு செய்க.

ஜனவரி 1: ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது – ₹ 80,000

ஜனவரி 2: வங்கியில் செலுத்திய ரொக்கம் – ₹ 40,000

ஜனவரி 3: ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது – ₹ 5,000

ஜனவரி 4: லிப்டன் நிறுவனத்திடமிருந்து சரக்குகளை கடனுக்கு கொள்முதல் செய்தது ₹ 10,000

ஜனவரி 5: ஜாய் என்பவரிடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது – ₹ 11,000 ***(அல்லது)***

(ஆ) பின்வரும் நடவடிக்கைகளை நேரடியாக பேரேட்டில் எடுத்து எழுதவும்:

2017 ஜூன் 1: ராஜா ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது – ₹ 50,000

2017 ஜூன் 6: ரொக்கத்திற்கு சரக்கு விற்றது – ₹ 8,000

2017 ஜூன் 8: தேவி என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது – ₹ 9,000

2017 ஜூன் 15: ரொக்கம் கொடுத்து சரக்கு வாங்கியது – ₹ 4,000

2017 ஜூன் 20: சாந்தி என்பவரிடம் கடனுக்கு சரக்கு வாங்கியது – ₹ 5,000

26. (அ) ரவிச்சந்திரன் என்பவரது ஏடுகளிலிருந்து 31-12-2016 அன்று எடுக்கப்பட்ட இருப்புகளிலிருந்து இருப்பாய்வு தயாரிக்கவும்:

விவரம்	தொகை (₹)	விவரம்	தொகை (₹)
முதல்	1,50,000	விற்பனை	75,000
கடனாளிகள்	22,800	விற்பனைத் திருப்பம்	1,000
பெற்ற வாடகை	500	அளித்த தள்ளுபடி	800
வங்கி மேல்வரைப்பற்று	3,100	பெற்றத் தள்ளுபடி	1,000
கடனீந்தோர்	5,500	கூலி	2,900
வளாகம்	1,46,000	சம்பளம்	3,500
தொடக்க சரக்கிருப்பு	10,000	கழிவு கொடுத்தது	1,100
கொள்முதல்	45,000	பொதுச் செலவுகள்	2,000

(அல்லது) (ஆ) பின்வரும் நடவடிக்கைகளின் கணக்கியல் சமன்பாட்டினை தயார் செய்க:

(i) முருகன் ₹ 80,000 பணத்துடன் தொழிலைத் தொடங்கினார்

(ii) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹ 30,000

(iii) ரொக்கமாக வழங்கிய சம்பளம் ₹ 5,000 (iv) குமாரிடமிருந்து சரக்கு வாங்கியதற்கு. புணம் வைப்பு இயந்திரம் மூலமாக செலுத்தப்பட்டது ₹ 5,000

(v) கூடுதல் முதல் இட்டது ₹ 10,000

27. (அ) நவீன வணிக உலகில் கணக்காளரின் பங்களிப்பு பற்றி விளக்குக. ***(அல்லது)***

(ஆ) குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.